# நல்லைக் குமரன் மலர்

## 1998



6

வெளியீடு:
யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவ சமய விவகாரக்குழு

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்ற கீதம்

ராகம்: மோகனம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ்நக ராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே (ஈழத் தமிழர்...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம் (ஈழத் தமிழர்...)

ஏழிசை வல்லோன் யாழிசைப் பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழி சூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம் (ஈழத் தமிழர்...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதரராவர்
நமதரும் பண்பு கலைகலாச் சாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல் வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடும் தொழில் நிலையங்கள்
எழிலுறு கோட்டை கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

தேவ மந்திர கீத மொலிக்கும்
விளங்கிடு குர் ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும். (ஈழத் தமிழர்...)

# நடராஜ வடிவமும் தத்துவமும்

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

தேன்புக்க தண்பணை சூழ் தில்லைச் சிற்றம் பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடி
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணி யெல்லாம்
ஊன் புக்க வேற்காளிக் கூட்டாங் காண் சாழலோ.

(திருவாசகம் 12:14)

தோழி, தேன் பாய்கின்ற குளிர்ந்த மருதநிலம் சூழ்ந்த தில்லைச் சிற்றம்பல முடையான் தான் திருவாலங்காட்டிற் சென்று ஊர்த்துவ தாண்டவம் செய்ய வில்லையெனில் பூவுலகத்து உயிர்கள் எல்லாம் காளி என்னும் தெய்வத்திற்கு உணவாகிவிடும். அங்ஙன மாகாமல் உலகினைக் காக்கும் பொருட்டு சிவன் ஊர்த்துவ தாண்டவஞ் செய்து அவள் செருக்கை அடக்கினார் என்று சாழல் கொட்டுவோம் என்பது இதன் பொருளாகும்.

சிவசைதன்யம் அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதே சிவதாண்டவம் அது இல்லையெனில் பிரபஞ்சமே சூனியமாகி விடும், என்பர் சுவாமி சித்பவானந்தர்.

இவ்வுலகில் துன்பங்களையும் துயரங்களையும் உணர்ந்த சான்றோர் இம்மண்ணில் பிறவியே வேண்டாம் எனத் தொழுது நிற்க, அப்பரடிகளோ சிவபிரானின் ஆனந்தத் திருநடனத்தை காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டும் என இரந்து நிற்பர். அவ்வளவு அற்புதமானது ஆடவல்லானின் அழகிய திருநடனம்.

சிவாகமங்களும் அவற்றின்வழி நூல்களும் இறைவனுக்கு உருவத்திருமேனி உண்டென்றும் அது இருபத்தைந்து மூர்த்தி பேதங்களையுடையது என்றும் கூறக்காணலாம். இவ்விருபத்தைந்து திருமேனிகளுள் மிகவும் அற்புதமான வடிவம் நடராஜ வடிவமாகும்

நாட்டிய சாஸ்திரத்தில் 108 தாண்டவங்கள் கூறப்பட்டுள்ளன. சிவாகமங்களும் தாண்டவங்கள் 108 என்றே கூறுகின்றன. இத்தாண்டவங்களை ஆடும் பெருமானாக நடராஜப் பெருமான் விளங்குகின்றார்.

சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்த காரைக்காலம்மையார் ஆடவல்லானின் திருநடனத்தில் தம்மை மறந்து பக்தி செலுத்திப் பாடிப் பரவியுள்ளார்.

துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்
உழை இளி ஓசை பண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரைவினோ டாடும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங் காடே.

(திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் 9)

என்றும்

காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சுழல அனல் கை யேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடம் திருவாலங் காடே.

என்றும் அம்மையார் பாடிய பாடல்கள் நடராஜப் பெருமானுடைய ஆடற் சிறப்பினை எடுத்து விளக்குவனவாகும்.

காரைக்காலம்மையாருக்குப் பின்னர் வாழ்ந்த நாயன்மார்களும் இப் பெருமானுடைய ஆடலை வியந்து பக்திப் பரவசத்துடன் பாடிப் பரவியுள்ளனர். அவற்றுள் ஒன்றுதான் அப்பர் சுவாமிகள் பாடிய

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே.

எனும் திருப்பாடலாகும். திருமூலரும் திருக்கூத்துத் தரிசனம் எனும் மகுடத்தில் நடராஜ வடிவத்தையும் அதன் தத்துவத்தையும் விரித்து விளக்கியுள்ளார். சைவசித்தாந்த நூல்களிலும் நடராஜ வடிவம் மேலும் விளக்கம் பெறுகிறது. அதனால்தான் இந்நூல்கள் அனைத்தையும் ஊன்றிப்படித்த சோழப் பெருமன்னர் காலச் சிற்பிகள் வடித்த நடராஜவடிவங்கள் குப்தர் கால, பல்லவர் கால ஆடவல்லானின் திருமேனிகளைவிட வனப்பும் கவர்ச்சியுமுடையனவாகவுள்ளன.

இத்தகைய சிறப்பு மிக்க நடராஜ வடிவத்தின் தத்துவம்பற்றி இனி ஆராய்வோம்.

சிவத்துக்கு இருவித நிலையுண்டு. ஒன்று எல்லாவற்றையும் கடந்தது. மற்றொன்று எல்லாவற்றிலும் கலந்தது. முன்னையது சொரூபம் என்றும் நிர்க்குணம் என்றும் பின்னையது தடத்தம் என்றும் சகுணம் என்றும் சொல்லப்படுகின்றன. எல்லாவற்றையும் கடந்த சிவத்துக்கு உருவம், அருவம், ஐந்தொழில் என்பன இல்லை. இது, "சிவனுரு அருவுமல்லன் சித்தினோ டசித்துமல்லன் பவந்தரு தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானுமல்லன்" என வரும் சிவஞான சித்தியார் செய்யுளில் (70) விளக்கப்படுகிறது.

சிவன் இயற்கையோடு இயைந்து நிற்கும் நிலையே எல்லாவற்றிலும் கலந்த நிலை. சிவம் அறிவுப் பொருள். இயற்கை சடப் பொருள். சிவம் இயற்கையுடன் இயைந்த நிலையில் இயக்கம் (அசைவு) உண்டாகிறது. சிவத்துக்கும் தனித்த இயற்கைக்கும் அசைவு கிடையாது.

சிவம் தனித்தும் இயற்கையுடன் கலந்தும் நிற்கும். இயற்கை தனித்து நில்லாது. அது சிவத்துடன் கலந்தே இயங்கும் இயல்பு கொண்டது. சிவமும் இயற்கையும் கலந்த நிலையை விளக்கும் கலையாக சிதம்பரம் உள்ளது. சிதம்பரம் எனும் கோயில் வெறும் கல்லன்று, மண்ணன்று, சுவரன்று கட்டிடமுமன்று.

இது மூன்று பகுதிகளையுடையது ஒன்று ஞான சபை. மற்றொன்று நடராஜ மன்று. இன்னொன்று சிவகாமிப் பொது ஞானசபை சிவத்தின் கடந்த நிலையைச் சுட்டுகின்றது. சிவகாமி வடிவம் இயற்கை அன்னையின் அறிகுறியாக திகழ்கிறது. கடந்த சிவம் இயற்கைச் சிவ காமியுடன் இயைந்துள்ள நிலையில் எழும் இயக்கத்தை உணர்த்துகிறது. அதுவே நடராஜ வடிவம் என்பர் கல்யாணசுந்தரமுதலியார்.

நடராஜ வடிவம் மூன்று கண்களும், நான்கு தோள்களும் சாந்த குணமும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் கொண்டிருக்கும். சடைமுடியிற் கங்கை, பிறை, கொக்கிறகு, ஊமத்தை, எருக்கு, சிறுமணி, மண்டையோடு, பாம்பு ஆகியன காணப்படும். இடது காதிற் பத்திர குண்டலமும், வலது கதில் மகர குண்டலமும் விளங்கும்.

வலது பாதம் அபஸ்மாரபுருஷன் எனப்படும் முயலகன் மீது ஊன்றிய நிலையிலும், இடது பாதம் தூக்கிய நிலையிலும் (குஞ்சித பாதமாகவும்) அமைக்கப்படும். பொதுவாக நான்கு கைகளுடன் தோன்றும் இப்பெருமானுடைய பின் வலது கையில் உடுக்கையும், பின் இடது கையில் தீயும் உள்ளன. முன்வலக்கரம் அபயகரமாகவும், முன் இடக்கரம் வீசுகரமாகவும் உள்ளன.

சிவபிரான் பஞ்சபூத நாயகனாக விளங்குகிறார். பஞ்ச கிரிகைகளையும் (ஐந்தொழில்) அவரே செய்கிறார். திருக்காஞ்சியில் நிலமாகவும், திருவானைக்காவில் நீராகவும், திருவண்ணாமலையில் தீயாகவும், திருக்காளத்தியில் காற்றாகவும், திருத்தில்லையில் ஆகாசமாகவும் நின்று அருள் புரிகின்றார். சூரிய வியபத்தில் சூரிய வடிவமாகவும், சோமநாதத்தில் சந்திரவடிவமாகவும், எல்லா உயிர்களிலும் பசுபதியாகவும் அமர்ந்த இறைவன் சிதம்பர ரகசியத்தில் ஆகாச மூர்த்தமாக விளங்குகிறான்.

மேலும இறைவனின் ஊன்றிய பாதம் நிலத்தையும், முடியில் உள்ள கங்கை நீரையும், இடக்கையில் ஏந்திய அக்கினி தீயையும், இருபுறமும் பறந்து செல்லும் விரிசடையும் ஆடையும், காற்றையும் திருவாசியில் நின்று எழும் பிரபை விசும்பையும் சுட்டுவதாகக் கொள்ளலாம். அதனால் அவன் பஞ்சபூத நாயகன் எனப்பெயர் பெறுகின்றான்.

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் சிவபிரானே செய்கின்றான் என்பதை விளக்கும் அற்புத வடிவமே நடராஜ மூர்த்தமாகும்.

கூளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீயடி நீர், தீ, கால் நீள்வா னிடை யாடி
நாளுற அம்பலத்தே யாடும் நாதனே

(திருமந்திரம்: 2746)

நடராஜப் பெருமானே ஐந்தொழில் களைச் செய்கிறான் என்பதை உண்மை விளக்கம் பின்வரும் 35வது பாடல்மூலம் விளக்குகிறது.

தோற்றம் துடியதனில் தோயும் திதி யமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பாதத்தே நாடு

அதாவது, உடுக்கு ஏந்தியகை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அக்கினி ஏந்தியகை அழித்தலையும், ஊன்றிய பாதம், மறைத்தலையும், குஞ்சித பாதம் அருளலையும், சுட்டி நிற்கின்றன.

இதே கருத்தைத் திருமூலரும் பின்வரும் பாடல் மூலம குறிப்பிடுவர்:-

அரன்துடி தோற்றம்; அமைப்பில் திதியாம
அரன் அங்கிதன்னில் அறையிற சங்காரம்
அரனுற்ற ணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே.

(திருமந்திரம்: 2799)

சிவனாரின் திருநடனத்தை ஸ்ரீபஞ்சாட்சரத்தோடும் ஒப்பிட்டுக் கூறுவர். திருவடி

'ந'கரத்தையும். திருவுதரம் 'ம'கரத்தையும், திருத்தோள் 'சி'கரத்தையும், திருமுகம் 'வ'கரத்தையும், திருமுடி 'ய'கரத்தையும், சுட்டி நிற்கின்றதென்பர். இஃதன்றி சூக்கும பஞ்சாட்சரத்தால் இது அமைந்துள்ளதாகவும் கூறுவர். துடி 'சி'கரத்தையும், வீசுகரம் 'வ'கரத்தையும் அபயகரம் 'ய'கரத்தையும், அக்கினி 'ந'கரத்தையும், முயலகன் 'ம'கரத்தையும் சுட்டுவதாகச் சொல்வர். ''உண்மை விளக்கம்'' அருளிய திருவதிகை மனவாசகங் கடந்தார்.

நடராஜ வடிவத்தைச் சுட்டிநிற்கும் திருவாசியை ஓங்காரத்தின் கொம்பாகவும், சிவபிரானை ஓங்காரமாகவும் உண்மை விளக்கம் கூறும்.

''ஓங்காரமே நல்திருவாசி யுற்றதனில்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவரணி அம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்''

(உண்மை விளக்கம் 34)

சிவபிரான் ஐந்தொழில்களையும் செய்ய ஏழுவகைத்தாண்டவங்களை ஆடினார் என்பர் அறிஞர். அதன் விபரம் வருமாறு:

| தாண்டவத்தின் பெயர் | தொழில் | இடம் |
|---|---|---|
| 1. காளிகா தாண்டவம் (முனிதாண்டவம்) | படைத்தல் | திருநெல்வேலி (தாமிரசபை) |
| 2. கௌரிதாண்டவம் | காத்தல் | திருப்புத்தூர் (சிற்சபை) |
| 3. சந்தியாதாண்டவம் | காத்தல் (நிலைநிறுத்தல்) | மதுரை (ராஜசபை) |
| 4. சங்காரதாண்டவம் | அழித்தல் | பிரபஞ்சத்தில் நடுச்சாமத்தில் ஆடப்படுவது |
| 5. திரிபுரதாண்டவம் | மறைத்தல் | திருக்குற்றாலம் (சித்திரசபை) |
| 6. ஊர்த்துவதாண்டவம் | அருளல் | திருவாலங்காடு (இரத்தினசபை) |
| 7. ஆனந்ததாண்டவம் | பஞ்சகிருத்தியம் (ஐந்தொழில்) | தில்லைச்சிதம்பரம் (பொன்னம்பலம்) |

ஆகமங்கள் 108 வகை நாட்டியங் களைக் குறிப்பிட்டபோதும் ஏழுவகைத் தாண்டவம் உட்பட ஒன்பது வகை நாட் டியங்களையே விளக்குகின்றன. இவ் வொன்பது வகை நாட்டியங்களையும் ஆடும் நிலையில் வெவ்வேறு நிருத்த மூர்த் தங்களாக நடராஜப் பெருமான் அமைக் கப்பட்டுள்ளார். அவை வடிவத்துக்கு வடிவம் சிற்சில வேறுபாடுகளையுடையன. அவ்வடிவங்களில் மறைபொருளை உணர்த் தும் அமைப்புக்கள் பலவுள. ஒவ்வோர் அங்கமும் அணியும பிறவும் கூறும் தத்து வக் கருத்துக்கள் மிகவும் நுட்பமானவை.

ஓர் உருவமில்லாத இறைவனுக்கு திரு மேனியாக ஆகாசம் கொள்ளப்படுகிறது. "விசும்பே உடம்பு" என்பர் சேரமான் பெருமாள் நாயனார் (பொன்வண்ணத் தந்தாதி: 19) திசைகள் எட்டும் இப்பெரு மானுடைய திருக்கைகளாகும். இதனை "திசைகோள்" என்பர். சேரமான் பெரு மாள் நாயனார் (பொன்வண்ணத்தந்தாதி: 19) ஊன்றிய பாதம் மறைத்தலையும், தூக்கிய பாதம் அருளலையும் சுட்டி நிற் கின்றன என்பதை

"ஈட்டிய வினைப்பயன் எவற்றையும்
மறைத்து நின்று
ஊட்டுவதாகும் நின் ஊன்றிய பாதமே
அடுத்து இன்னுயிர்கட்கு அளவில்
பேரின்பம்
கொடுப்பது முதல்வ நின் குஞ்சித
பாதமே"

எனும் குமரகுருபர சுவாமிகளின் பாட லடிகள் புலப்படுத்துகின்றன. (சிதம்பர மும்மணிக்கோவை:) சூரியன், சந்திரன், தீ என்பவற்றையும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பவற்றையும் முக்கண்கள் சுட்டி நிற்கின்றன. (காமிகாகமம் அர்ச் சனா விதிப்படலம்: 335)

சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் ஆகிய மூவகை வினைகள் தரும் துன்பங் களையும் இறைவனது புன்முறுவல் அழிக் கின்றது எனச் சிவதருமோத்திரம் கூறு கின்றது. சடைமுடி ஞானத்தைச் சுட்டு கிறது. 'நுண்சிகை ஞானமாம்" எனக் கூறும் திருமந்திர அடி இதனைப் புலப் படுத்துகிறது. நடராஜர் அணிந்துள்ள பிறை அவருடைய பேரறிவு நிலையையும் (காமிகாகமம், அர்ச்சனா விதிப்படலம்: 335) திருநீறு பராசக்தியையும் ('பராவ ணமாவது நீறு') (சம்பந்தர் - திருநீற்றுப் பதிகம் பூணூல் குண்டலினி சக்தியையும் குறிக்கின்றதென்பர். பூணூல் குண்டலினி சக்தியை மட்டுமன்றி வேதாந்தத்தையும் குறிக்கின்றதென்பதனை "நூலது வேதாந் தம்" எனும் திருமந்திர வரி புலப்படுத்து கிறது.

'கோவணம்' வேதத்தைக் குறிப்பிடு கிறது என்பதற்குப் பின்வரும் பாடலடிகள் சான்றாகவுள்ளன.

"மன்னுகலை துன்னுபொருள் மறை
நான்கும் வான் சரடாத் தன்னையே
கோவணமாகச் சாத்தினன் காண்
சாழலோ"

(திருவாசகம்; திருச்சாழல்: 256)

ஆடவல்லானின் 'சிலம்பும் கழலும்' ஆன் மாக்களின் வினையறுத்து வீடுபேறு அரு ளலை விளக்குகின்றன என்று போற்றிப் பஃறொடை கூறுகிறது.

"கள்ளவினை வென்று பிறப்பறுக்கச்
சாத்திய வீரக்கழலும்..." (போற்றிப்
பஃறொடை 71 – 72)

காதுகள் ஓங்காரத்தையும் (தோடுடைய செவியன்" சம்பந்தர்) சூலம் முக்குணங் களையும் (காமிகாகமம்: 336) முத்தொழி லையும் (பௌஷ்கராகமம்) மும் மூர்த்தி களையும் (ஒருபாஒருபஃது) மும்மலங்க ளையும் (காமிகாகமம் அர்ச்சனா விதிப் படலம் 337) 'பரசும் 'வாளும்' பேராற் றலையும் (காமிகாகமம் 335) சுட்டி நிற் கின்றனவென்பர்.

வாளினை ஞானம் என்பர் மணிவாசகர். ''ஞானவாள் ஏந்தும் ஐயர்'' என இதனைத் திருவாசகம் விளக்கும். (615) ''அங்குசம்'' ஒரு பொருளை அடைந்து அனுப்வித்தற் கறிகுறியாகவுள்ளது.

'மழு' பராசக்தியின் உருவாகவுள்ளது அத்துடன் பராசக்திக்கும் மேலாக இறைவன் உள்ளனன் என்பதையும் புலப்படுத்துகிறது. நாத வடிவினனாக இறைவன் இருக்கிறான் என்பதை 'மணி' குறிப்பிடுகிறது. (காமிகாகமம் அர்ச்சனா விதிப் படலம் 338)

வீசிய கை தூக்கிய திருவடியை நோக்கி நிற்பதால் உயிர் பேரின்ப நிலையை அடைவதைக் குறிக்கின்றது. ''பாம்பு'' குண்டலினி சக்தியைச் சுட்டுகிறது. முயலகன் ஆணவத்தின் வடிவமாகவும் ஆன்மாவைப் பற்றி நிற்கும் மலமாகவும் கொள்ளப்படுகிறது.

## நடராஜப் பெருமானும் முருகப் பெருமானும்

நிறைவாக ஒருகருத்தை இவ்விடத்திற் சுட்டிக்காட்டுதல் இன்றியமையாத தாகும். சிவன் வேறு முருகன் வேறு அல்லர் என்பர் சைவசமயிகள். இதற்கு இலக்கியங்களில் நிறைய அகச் சான்றுகளுண்டு. சிறப்பாக கந்தபுராணத்தில் வரும் பின்வரும் பாடல் இதனை உறுதிசெய்யக் காணலாம்.

ஈசனே யவன் ஆடலால் யதலையாயினன் காண
ஆசிலா லவன் அறுமுகத் துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனொடு யேதகன் அல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

(கந்தபுராணம் 3:12:129)

இதனை அப்பர் சுவாமிகளும் பின்வரும் திருப்பதிகத்தின் மூலம் உறுதி செய்வர்.

முன்னையார் மயில் ஊர்தி முருகவேள்
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்
என்னை யாளும் இறையவன் எம்பிரான்
பின்னை யாரவர் பேரெயிலாளரே.

(அப்பர் தேவாரம் 05:16:07)

இவ்வாறு நடராஜப் பெருமானும் முருகப் பெருமானும் இருவர் அல்லர் ஒருவரே என்பதைத் திருமூல நாயனாரும் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு விளக்குவர்.

ஆறுமுகத்தில் அதிபதி நானென்றும்
கூறு சமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தெற்குத்திருவம் பலத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கி நின்றானன்றே

(திருமந்திரம் 09-08-10)

ஐந்து முகத்தோடு உமாதேவியாரின் அதோமுகத்தையும் சேர்த்து ஆறுமுகங்களோடு கூடிய சிவனார் தாம் என்றும், சமயங்கள் போற்றும் குருபரன் தாமே என்றும், சிவன்-முருகன் என வேறுபாடின்றி விளங்கும் பரம்பொருள் அம்பலவாணரே யாவர் என்றும் நாயனார் அழகாக விளக்கமளித்துள்ளார்.

ஆடிய காலும் அதிற் சிலம்போசையும்
பாடிய பாட்டும் பலவான நாட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாட
தேடி யுளேகண்டு தீர்ந்தற்ற வாறன்றே

(திருமந்திரம் 09-08-12)

மான் வேதத்தைக் குறிக்கின்றது. இதனை

"வேதமான் மறி ஏற்றுதல் மற்றதன்
நாதன் தானென நவிற்றுமாதே
(பதினொராம் திருமுறை)

என்னும் பாடல்வரி சுட்டி நிற்கிறது

அபஸ்மாரபுருஷன் (முயலகன்) மீது நடராஜர் ஆடுவதன் மூலம் அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தைப் பெருக்குகிறார். சிவன் பெரியதொரு யோகி இது அவருடைய தலையில் உள்ள பாம்பு, பிறை என்பன மூலம் வெளிப்படுகிறது. பாம்பு நஞ்சை உமிழும் தன்மையுடையது. மரணத்தைக் கொடுக்கும் இயல்புடையது. நிலவு அமுதத்தைச் சிந்துவதன் மூலம் அமரத்துவத்தையளிக்கும். பண்புடையது. சடையில் உள்ள கபாலம் மரணத்தை எண்ணாது வாழ்வு நிரந்தரம் என நினைப்போரைப் பார்த்துச் சிரிக்கிறது. 'கங்கை உலகுக்கு ஊட்டச்சக்தியளித்துப் பேணுகிறது மேலும், பாம்பு; அழிவிலாத ஆன்மா ஒரு தேகத்திலிந்து இன்னொரு தேகத்தைச் சென்றடைகின்றதென்பதை உணர்த்தி நிற்கிறது. அத்துடன் நாகவழி பாட்டையும் காட்டி நிற்கிறது.

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் நிலையில்லாதவை; மாற்றத்துக்குரியவை கடவுள் மட்டும் மாற்றமடையாத பரம் பொருள்; என்றும் நிலைப்படுத்துப்வர்; அழிவிலாதவர் என்ற உண்மையையும் நடராஜ வடிவம் உணர்த்தி நிற்கிறது என்பா கமல் சுவலபில்

## நடராஜ வடிவத்தின் கலையழகு

சைவசமயத் திருமேனிகளுள் சிறந்தது நடராஜ வடிவமேயாகும். இது தத்துவச் சிறப்பு மட்டுமன்றிக் கலைவனப்புமுடையது. இவ்வடிவம் பலவகை அமைப்புகளைக் கொண்டதாக அமைக்கப்படும். ஒவ்வொரு வடிவம் தனித்துவம் மிக்க கலைச்சிறப்புடையதெனினும் ஆனந்தத்தாண்டவம் புரியும் 'ஆடவல்லான்' வடிவமே மிகவும் அழகுடையது. ஆனந்த தாண்டவத்தை 'நாதாந்த நடனம்' என்றும் கூறுவர்

அதிசயம் விளக்கும் இறைவனின் இந்த அற்புதக்கூத்து சொல்லித் தெரியும் கலையல்ல. "வானம் மணிமுகடாய் மால்வரையே தூணாக ஆனபெரும்பார் ஆரங்காக" ஆனந்தமாக ஆடிக்கொண்டிருக்கும் நிருத்த நிலையே இந்நடனநிலை. "காடும் கடலும், மலையும், மண்ணும், விண்ணும், சுழல" அப்பன் ஆடும் ஆனந்தக் காட்சியை மனக்கண்ணாற் கண்டான் கவிஞன். இதனால ஒரு காலை ஊன்றி மறுகாலைத் தூக்கி ஆடும் அற்புதக் கூத்தை பக்திப் பெருக்குடன் பாடினான். இப்புலவன் கற்பித்த கற்பனைக்கு வியப்புறும் உருவங்களைச் செப்பிலே செய்தளித்தான் சிற்பி. (இராமசுவாமி 1976:35) கைவினைததிறனிலும், அங்க அமைப்பிலும். அலங்கார நுணுக்கத்திலும், ஈடிணையற்ற எழிலூட்டலும், வீறுடனும விளங்கும் வடிவமாக நடராஜ வடிவம் உள்ளது.

நடராஜ வடிவம் தரும் நாதாந்த நிலையையும், கலைவனப்பையும் சொல்லால் இயம்புதல் எளிதன்று. ஆனால் அதைப் பார்த்து அனுபவித்துப் பெறுதல் வேண்டும். நோக்குநதோறும் புதுப்புது அனுபவத்தைக் கொடுக்கும் கலைவனப்பு மிக்கது. இவ் வடிவமென்பது ஆனந்த குமாரசுவாமி போன்றோரது கருத்தாகும்.

நடராஜ வடிவம் ஒரு கூட்டத்தார்க் குரியதன்று எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும், எல்லாத் தத்துவ ஞானிகளுக்கும், எல்லாப் பக்தர்களுக்கும், எல்லாக் கலைஞர்களுக்கும் பொருந்துவதாக அமைந்து தத்துவரூபம் காட்டும் அற்புத வடிவமாகவுள்ளது. மனித வாழ்வில் ஒன்றோடொன்று பொருந்தாமல் சிக்குண்டு பலவிவகாரங்களுக்குச் செல்லும் நிலையைத் தடுத்தாளும் ஆற்றல் இதற்குண்டு. இது இயற்கையின் கோட்பாடாகத் திகழ்கின்றது. இத்தகைய வடிவத்தைத் தமது தியானத்தாலும் ஆத்ம ஞானத்தாலும் தோற்றுவித்த இருடிகளது ஞானயோக நிலையைப் போற்றாமலிருக்க முடியாது எனபர் ஆனந்தகுமாரசுவாமி.